# 04-04-2024 செய்தி

## மக்கள்தொகை சர்ச்சை

- கேரள மாநில அரசுக்குக் கடன் வழங்க உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்திரவிட்டதைத் தொடர்ந்து அம்மாநில அரசுக்கு ரூ.13,608 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- அதேவேளையில், இந்த வழக்கில் மூலம், மாநில அரசின் கடன் வாங்கும் அதிகாரம் குறித்த முக்கியமான வாதத்தையும் உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசு எழுப்பியிருக்கிறது.
- கேரள மாநில அரசு கடந்த சில மாதங்களாகவே பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறது. கடன் வரம்பை அதிகரிக்க கோரிய கேரள அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.
- “ஒரு மாநில அரசு தனது தவறான நிதி மேலாண்மையால் நிதி நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டுள்ள நிலையில் மத்திய அரசுக்கு எதிராக மாநில அரசுக்கு இடைக்கால நிவாரணம் அளிக்க முடியாது.
- அப்படிச் செய்வது மாநில அரசுகள் நிதிக் கொள்கைகளை மதிக்காமல் செயல்பட்டுவிட்டு கூடுதல் கடன் பெறும் உரிமை கோருவதை ஊக்குவிக்கும் தவறான முன்னுதாரணமாகிவிடும்” என்று நீதிபதி கூறியுள்ளார்.
- ஆனால், 15ஆவது நிதி ஆணையத்தின் புதிய கொள்கையால் தமிழ்நாடு, கர்நாடகம் உள்ளிட்ட பிற தென் மாநிலங்களைப் போல் குறைவான நிதிப் பகிர்வால் பாதிக்கப்பட்டது.
- கேரளத்தின் நிதி நெருக்கடிக்கு முக்கியக் காரணமாகச் சொல்லப்படுகிறது. இயற்கைச் சீற்றம், கரோனா பரவல் போன்ற எதிர்பாராச் சிக்கல்களும் இதில் பங்கு வகிக்கின்றன.
- நடப்பிலிருக்கும் 15ஆவது நிதி ஆணையம் இதுவரை எல்லா நிதி ஆணையங்களும் பின்பற்றிவந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 1971-ஐக் கணக்கில் கொள்ளாமல் 2011-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பை எடுத்துக் கொண்டது.
- மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் தென் மாநிலங்களைப் போல் வட மாநிலங்கள் கவனத்துடன் செயல்படவில்லை. அதனால் 2011-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி வடமாநிலங்களுக்குக் கூடுதல் நிதி கிடைக்கும் சூழல் உள்ளது.
- நிதி ஆணையத்தின் வரையறைகளில் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தியதற்கான சிறப்பு நிதிப் பங்கிடும் (12.5%) உண்டு. ஆனால், அதுவும் 2011இல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலானதுதான்.
- நிதிப் பங்கீட்டில் பாரபட்சம் நிகழ்வதாக, தென் மாநிலங்கள் குற்றஞ்சாட்டிவருகின்றன. உதாரணமாக, தமிழ்நாட்டில் வசூலிக்கப்படும் வரி ஒரு ரூபாய் எனக் கொண்டல் மத்திய அரசு திருப்பி அளிக்கும் நிதிப் பங்கீடு 29 பைசா மட்டுமே என்று தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு 2024-25ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையில் தெரிவித்தார்.
- ஆனால், வசூலிக்கப்படும் தொகைக்கும் கூடுதலாக 1.72 ரூபாய் உத்தரப் பிரதேசத்துக்குத் திருப்பியளிக்கப்படுகிறது. மேலும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களுக்கான நிவாரண நிதியிலும் தென் மாநிலங்கள் பாரபட்சத்துக்கு ஆளாகின்றன.
- தற்போது உச்ச நீதிமன்றம் கடன் வாங்குவதற்கான மாநில அரசின் உரிமை குறித்த கேரள அரசின் கோரிக்கையை அரசமைப்பு அமர்வுக்கு மாற்றியுள்ளது.
- இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 293 இல் உள்ள கடன் வாங்கும் அதிகாரம் குறித்த உரிமை தொடர்பாக நீதிமன்றம் விசாரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## தைவானில் 7.4 ரிக்டர் நிலநடுக்கம்

- தைவானில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்குப் பிந்தைய மிக சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இதுவாகும். அந்தத் தீவின் ஜிச்சி பகுதியல் 1999 செப்டம்பரில் 33 கி.மீ, ஆழத்தில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.7 அலகுகளாகப் பதிவானது. இந்த நிலநடுக்கத்தில் 2,415 பேர் உயிரிழந்தனர்.
- பிலிப்பின்ஸ் கடல் புவித் தகடு, யூரோசிய புவித் தகடும் ஒன்றுடன் ஒன்று உராயும் பகுதியில் அமைந்துள்ளதால் தைவானில் அடிக்கடி சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.
- தற்போது நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த பகுதியில் இந்த இரு புவித் தகடுகளும் ஆண்டுக்கு 75 மில்லி மீட்டர் எதிரெதிராக நகர்கின்றன.

## இந்தியர்கள் 200 பேரில் அம்பானி முதலிடம்

- உலகளாவிய பில்லியனர்களின் பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது. 100 கோடி டாலருக்கு (இந்திய மதிப்பில் ரூ.8,300 கோடி) மேல், சொத்து மதிப்பு கொண்டிருப்பவர்கள் பில்லியனர்கள் என்று வரையறுக்கப்படுகின்றனர்.
- இந்தியாவில் மட்டும் 200 பில்லியனர்கள் உள்ளனர். சென்ற ஆண்டில் அந்த எண்ணிக்கை 169ஆக இருந்தது.
- போர்ப்ஸ் வெளியிட்டுள்ள இந்திய பில்லியனர்கள் வரிசையில், 116 பில்லியன் டார் (ரூ.9.62 லட்சம் கோடி) சொத்து மதிப்பைக் கொண்டு முகேஷ் அம்பானி முதல் இடத்தில் உள்ளார்.
- 2-வது இடத்தில் கவசம் அதானி (ரூ.6.97 லட்சம் கோடி), 3வது இடத்தில் ஷிவ் நாடார் (ரூ.3.07 லட்சம் கோடி)
- 4-வது இடத்தில் சாவித்திரி ஜிண்டால் (ரூ.2.78 லட்சம் கோடி), 5-ஆவது இடத்தில் திலிப் ஷங்வி (ரூ.2.2 லட்சம் கோடி) உள்ளனர்.

**உலக அளவில்**

- உலகளாவிய பில்லியனர்கள் வரிசையில், லூயி விட்டான் நிறுவனத்தின் பெர்னார்ட் அர்னால்ட் முதல் இடத்தில் உள்ளார்.
- அவரது சொத்து மதிப்பு 233 பில்லியன் டாலராக (ரூ.19.33 லட்சம் கோடி) உள்ளது.
- 2-வது இடத்தில் டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் (ரூ.16.18 லட்சம் கோடி), 3-வது இடத்தில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பிசோஸ் (ரூ.16.10 லட்சம் கோடி) உள்ளனர்.
- உலகளாவிய பட்டியலில் முகேஷ் அம்பானி 9-வது இடத்திலும், கவுதம் அதானி 17-வது இடத்திலும் உள்ளனர்.
- பில்லியனர்கள் அதிகம் உள்ள நாடுகளின் வரிசையில் முதல் இடத்தில் அமெரிக்கா (813 பில்லியனர்கள்) 2-வது இடத்தில் சீனா (473 பில்லியனர்கள்), 3-வது இடத்தில் இந்தியா (200 பில்லியனர்கள்) உள்ளன என்று, போர்ப்ஸ் குறிப்பிட்டுள்ளது.